**12 R** Register No: ______

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

மணி: 1.30 **தமிழ்** மதிப்பெண்: 50

## பகுதி-I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 6 x 1 = 6

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேர பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்காலக் காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. பொருத்துக.
   அ) தமிழ் அழகியல் - பரலி. சு. நெல்லையப்பர்
   ஆ) நிலவுப் பூ - தி. சு. நடராசன்
   இ) கிடை - சிற்பி பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - கி ராஜநாராயணன்
   அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
3. தமிழில் திணை பாகு பாடு ________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருள் குறிப்பு ஆ) சொற்குறிப்பு
   இ) தொடர் குறிப்பு ஈ) எழுத்து குறிப்பு
4. வெள்ளச் சமவெளிகள் அழிய காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
   இ) பாறைகள் இல்லாமே ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
5. இவற்றை வாயுலுக்கே சென்று இன் முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது.
   அ) வக்கிரம் ஆ) அவமானம்
   இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
6. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க கால சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும்

## பகுதி - II

### பிரிவு - அ

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. 4 x 2 = 8

7. புக்கில், தன்மனை சிறுகுறிப்பு எழுதுக.
8. ஞாலத்தின் பெரியது எது?
9. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது விளக்கம் தருக.
10. நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தை குறிப்பிடுக.
11. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பிரிவு - ஆ

ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 2 x 4 = 8

12. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
13. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
14. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

பகுதி - III

பிரிவு - அ

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 4 x 2 = 8

15. பொருத்தமான வேற்றுமை உறுப்புகளை சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) குமரன் வீடு பார்த்தேன்.
ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.
16. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
**ஆசிரியருக்கு கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.**
17. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
**அலை, அளை, அழை**
18. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களை கண்டுபிடிக்கவும்.
அ) தாய்மொழி; ஈற்றிரு எழுத்துக்கள் வெளிச்சம் தரும்.
ஆ) சிறுகதை ஆசிரியர் முதல் பாதி நவீனம்.
(ஜெயகாந்தன், தமிழ் ஒளி, அம்பை, புதுமைப்பித்தன்)
19. உவமை தொடர்களை சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
**கிணற்றுத் தவளை போல**

பிரிவு - ஆ

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. 2 x 4 = 8

20. வாகைத் திணை அல்லது பொருள் வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக.
21. அ) இலக்கண குறிப்பு தருக. (புதுப்பெயர், மாதவம்)
ஆ) புணர்ச்சி வழி தருக. (வானமெல்லாம்)

பகுதி IV

கீழ்காணும் வினாவிற்கு விடை தருக. 1 x 6 = 6

22. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனை கலந்துரையாடலை தொகுத்து எழுதுக. (அல்லது) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழி பற்று, சமூக பற்று ஆகியவற்றை விவரிக்க.

பகுதி - V

23. அடி பிறழாமல் எழுதுக. 4 + 2 = 6
'துன்பு உளது' - எனத் தொடங்கும் கம்பராமாயணம் பாடலையும்,'........ படும்' என முடியும் திருக்குறளையும் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com